Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ 1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞூ சித்திரை மீ 4 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ஷஃபா பிறை 7 (17 04-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:128

88 August
IIஆம் பிரிவு
(விஞ்ஞானம்)
ஆரம்பம்:
19-4-86(காலை 7.30மணி)
(விடுமுறை நாட்களில் மேலதிக வகுப்புக்கள்)
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

7.30 - Physics
திரு. வர்ணம்
8.30 - Chemistry
திரு. தில்லைநாதன்
9.30 - Zoology
திரு. நாகநாதன்
10.30 - Botany
திரு. குகாதரன்
9.30 - 11.30-Pure & Appl. Maths
திரு. நல்லையா
விபரங்கட்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

# இனப்பிரச்சினை: பேச்சுகள் நடத்த இம்முறைதான் இறுதிச் சந்தர்ப்பம்

## இலங்கையிடம் இந்தியா விளக்கிக் கூறுமாம்

புதுடில்லி, ஏப்ரல் 16

பேச்சுக்கள் நடத்த கடைசிச் சந்தர்ப்பம் இது. சரியாகப் பயன் படுத்துங்கள்.

இப்படி இந்தியா, இலங்கைக்கு வலியுறுத்தும் என்று டில்லி அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

புதிய யோசனைகளை எழுத்து மூலம் கொண்டு சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் சாஹுல் ஹமீதுவிடம் இந்தியா இதனை வலியுறுத்திச் சொல்லிவிடும் என்று அவ்வட்டாரங்கள் கூறின.

இந்தியா இரண்டு விஷயங்களை இலங்கை அமைச்சரிடம் வலியுறுத்தித் தெரிவிக்க உள்ளது.

ஒன்று, யுத்தநிறுத்தம் பலனளிக்கக் கூடிய முறையில் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

இரண்டாவது, பேச்சுக்கள் மூலம் பலனளிக்கக்கூடியவகையில் தீர்வுக்கான இலங்கைக்கு உள்ள கடைசிச் சந்தர்ப்பம் இதுவே.

எழுத்து மூலமான இலங்கை அரசின் பதிலை இந்திய வெளியுறவு கொள்கை வகுப்புக் குழுத் தலைவர் திரு ஜி. பார்த்தசாரதி, வெளியுறவுச் செயலாளர் திரு ஏ.பி. வெங்கடேஸ்வரன், முன்னள் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி ஆகியோர் நன்கு பரிசீலனை செய்வர் என்று தெரிகிறது.

யூனியன் பிரதேச அடிப்படையிலான புதிய யோசனைகள் குறித்து இந்திய அரசு வட்டாரங்களிலும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த யோசனைகள் தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## ராஜீவிடம் இன்று புதிய யோசனை கையளிப்பு

புதுடில்லி, ஏப்ரல் 17

இனப்பிரச்சினைக்கான புதிய யோசனைகள் இன்று வியாழக்கிழமை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் கையளிக்கப்படும்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் சாஹுல் ஹமீது எழுத்துமூலமான யோசனைகளை பிரதமரிடம் கையளிப்பார் என்று இந்திய அரசு அதிகாரி ஒருவர் சொன்னார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் பலிராம் பகத் அமைச்சர் சாஹுல் ஹமீதுக்கு நண்பகல் விருந்தளித்துக் கௌரவித்தார்

சரியான முறையிலான அதிகாரப்பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதை அமைச்சர் பகத் அச்சமயம் வலியுறுத்தினார்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு இந்திய உதவியை அமைச்சர் சாஹுல் ஹமீது மீண்டும் வலியுறுத்தினார்.

## ஜெயவர்த்தனவும் மக்களும் ராஜீவ் மீது நம்பிக்கை இழப்பது போல் தெரிகிறது

### 'இந்து'வுக்கு தொண்டா பேட்டி

திருச்சி, ஏப்ரல் 16

பந்து இப்போது பிரதமர் ராஜீவின் கையில் தான் உள்ளது. பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள பிரதமர் காந்தி உதவவேண்டும். ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் மக்களும் ராஜீவ் காந்தியின் நம்பிக்கை இழப்பது போல் தெரிகிறது.

இப்படி அமைச்சர் திரு எஸ். தொண்டமான் திருச்சியில் சொன்னார்.

அமைச்சரின் பேட்டி 'இந்து'வில் வெளியாகி உள்ளது.

திரு தொண்டமான் மேலும் சொன்னதாவது:-

தமிழ் ஈழத்துக்கு ஆதரவு இல்லை என்று பிரதமர் ராஜீவ் கூறுகிறார்

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கும் ஐக்கியத்துக்கும் அவர் ஆதரவு என்று கூறுகின்றார்.

உண்மையிலேயேதான் அவர் இப்படிக் கூறுகின்றாரா?

திரு. ஜெயவர்த்தனவும் திரு. ராஜீவ் காந்தியும் அடிப்படை அரசியல் தத்துவத்தில் பொதுவாக இருக்கின்றார்கள்.

தமிழ் ஈழத்துக்கு எதிராகவே இருவரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பின்னர் ஏன் இந்தியா, தமிழ் இளைஞர்களுக்கும் தீவிரவாதிகளுக்கும் தொடர்ந்து புகலிடம் கொடுத்து வருகின்றது?

இனப்பிரச்சினை பற்றி இரண்டு அரசுகளும் மணிக்கணக்கில் பேசின. பல யோசனைகளை ஆராய்ந்தன.

நடந்தது என்ன? கால

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டாரியுடனான பேச்சு பற்றி அமிர்

சென்னை, ஏப். 17

தேசிய, சர்வதேச ரீதியில் இனப்பிரச்சினையின் தாக்கங்கள் குறித்து திரு. பண்டாரியுடன் பேசினோம்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் சொன்னார்.

அண்மையில் சென்னையில் வைத்து திரு ரொமேஷ் பண்டாரியுடன் நடத்திய பேச்சுக்கள் குறித்து திரு. அமிர்தலிங்கம் கருத்து வெளியிட்டார்.

திரு. அமிர்தலிங்கம் தலைமையில் திரு. இரா. சம்பந்தன், திரு. எம். சிவசிதம்பரம், திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோர் திரு பண்டாரியைச் சந்தித்தனர்.

வடக்கு—கிழக்கு நிலை குறித்தும் திரு. பண்டாரியிடம் எடுத்துரைக்கப்பட்டதாகத் திரு அமிர்தலிங்கம் சொன்னார்.

## ரூபவாஹினி: தமிழ் - சிங்கள படங்கள் இல்லை

கொழும்பு, ஏப் 17

ரூபவாஹினியில் இனி தமிழ், சிங்களத் திரைப் படங்கள் காண்பிக்கப் படமாட்டா.

இப்படி ராஜாங்க அமைச்சர் டாக்டர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் சொன்னார்

ரூபவாஹினியில் சிங்கள, தமிழ்த் திரைப்படங்கள் காண்பிக்கப்படுவதனால் திரைப்பட மாளிகைகள் நட்டத்தில் இயங்குகின்றன என்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



உந்த மகுடி ராகத்துக்கு மர்மமான சக்தி ஒண்டு இருக்கத்தான் செய்யுதப்பா ......!

## 6 மீனவர் கைது

நல்லூர், ஏப்ரல் 17

பருத்தித்துறை, தாளையடி, நாகர்கோயில்ஆகிய இடங்களைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற பொழுதே கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இது சம்பந்தமாக இவர்களது உறவினர்கள் யாழ் அரச அதிபருடன் தொடர்பு கொண்ட பொழுது கைது செய்யப்பட்ட அனைவரும் பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தெல்லிப்பளை: ஹெலிக்கொப்டர் தாக்குதல் -- நேற்று

— காங்கேசன், பலாலி செய்தியாளர்கள் —

காங்கேசன்துறை, ஏப்ரல் 17

தெல்லிப்பளை, கட்டுவன் பகுதிகளில் நேற்று நண்பகல் ஹெலிக்கொப்டர் மூலம் பரவலாக தாக்குதல் நடத்தப்பட்டது.

தெல்லிப்பளை, வீமன்காமம், கட்டுவன் ஆகிய பகுதிகளில் சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

அதனால் பல வீடுகள், பாடசாலை, கோயில் என்பன சேதமடைந்தன.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்று நண்பகல் தெல்லிப்பளைச் சந்தியையும் அதற்கு அண்மித்த பகுதிகளையும் சுற்றி ரோந்து புரிந்த ஹெலிக்கொப்டர் ஒன்று சரமாரியாகச் சுடத் தொடங்கியது.

தெல்லிப்பளைச் சந்திக்கு அண்மையில் வயாவிளான் வீதியில் உள்ள அம்மன் கோயிலடியில் வந்த வாகனமொன்றை நோக்கி முதலில் சுடத் தொடங்கிய ஹெலிக்கொப்டர் தொடர்ந்து பரவலாக யாழ் – காங்கேசன்துறை வீதியிலும், தெல்லிப்பளைச் சந்தியிலும் தனது தாக்குதலைத் தொடர்ந்தது.

தெல்லிப்பளைச் சந்தியிலும், பிரதான வீதியிலும் சென்றுகொண்டிருந்தவர்கள் 'பிளாட்'

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் துப்பாக்கிச் சூடு

### இளைஞர் ஒருவர் மரணம்

பருத்தித்துறை, ஏப். 17

பருத்தித்துறையில் இளைஞர் ஒருவர் நேற்று துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

துப்பாக்கி வேட்டுக்குப் பலியான இந்த இளைஞர் சேதுநாயகம் ரவீந்திரராஜா (வயது 21).

புதன்கிழமை காலை 11.30 மணியளவில் இச் சம்பவம் நடந்தது

அவசர சிகிச்சைக்காக பருத்தித்துறை (மந்திகை) ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு இவர் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் ஒரு சில நிமிடங்களில் உயிர் பிரிந்தது.

## மூன்றாவது இளைஞர் மரணம்

வல்வெட்டித்துறை, ஏப். 17

சவூதி அரேபியக் கப்பல் கம்பெனிக்குச் சொந்தமான 'பெற்றோ ஸ்ரார் -16' எண்ணெய்க் கப்பல் மீதான குண்டு வீச்சில் மற்றும் ஒர் தமிழ் இளைஞர் மரணமானது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

குட்டிராசா என்று அழைக்கப்படும் இராமச்சந்திரன் சந்திரசேகரமே இந்த இளைஞர் ஆவார்.

இந்த இளைஞர் திருமணமாகி இரண்டு மாதங்கள் தான் பூர்த்தி ஆகி இருந்தன. 'பெற்றோ ஸ்ரார் -16' எண்ணெய்க் கப்பல் ஈரானியக் குண்டு வீச்சுக்கு உள்ளானது தெரிந்ததே.

## ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, ஏப். 16

சென்னை சட்ட மாணவரும் தமிழ் நண்பர் கழக உறுப்பினர்களும் புதுடில்லியில் இலங்கைத் தமிழர் ஆதரவாகக் குரல் எழுப்பினர்

அணிசேரா நாடுகளின் வெளிநாட்டமைச்சர் மாநாட்டில் இலங்கையில் நடைபெறும் படுகொலைகள் குறித்து இந்தியா குரல் எழுப்ப வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

## எவரும் மரணம் இல்லை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

கடந்த திங்கட்கிழமை நல்லூருக்கு அண்மையில் நடந்த சம்பவத்தில் எவரும் மரணமாகவில்லை என்று அறியப்படுகிறது.

நேற்றைய "உதயனில்" இச்சம்பவத்தில் இருவர் கொல்லப் பட்டிருக்கலாம் என அஞ்சப்படுவதாக இருந்தது.

ஆனால் எவரும் பரலைமாகவில்லை என்று இப்போது ஊர்ஜிதமாகி உள்ளது.

# சந்நிதி கோயிலுக்கு அருகில் துர்நாற்றம் வீசும் சடலங்கள்

## சிப்பாய்கள் சுடுவதால் அகற்ற முடியாத நிலை

யாழ். அரச அதிபரிடம் முறையீடு

நல்லூர், ஏப்ரல் 17

தொண்டமானாறு சந்நிதி கோயிலுக்கு அருகே அழுகிய நிலையில் வயோதிபர் இருவரின் சடலங்கள் கிடக்கின்றன.

சுமார் 80, 75 வயதுகள் உடைய இந்த வயோதிபர்களில் ஒருவர் பெண்.

ஆனந்த ஆச்சிரம மடத்திற்கு போகும் வழியில் இவர்கள் சுட்டுக் கொலைப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப் படுகிறது.

இது சம்பந்தமாக வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினரும் சந்நிதி கோயில் பரிபாலன சபையினரும் நேற்று யாழ். அரசாங்க அதிபரை சந்தித்து முறையிட்டனர்.

கடந்த புதன்கிழமை முதல் கோயில் அருகே இந்த இரு சடலங்களும் கிடக்கின்றன. ஆடு, மாடு போன்றவற்றின் சடலங்களும் கிடக்கின்றன.

கட்டாக்காலி நாய்கள் அவற்றை உருக்குலைத்து வருகின்றன என்று கூறப் படுகிறது.

இதனால் இங்கு துர்நாற்றம் வீசுகிறது.

சடலங்களை அகற்றச் செல்பவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுவதாகவும் தெரியவருகிறது.

சமீபத்திய சம்பவங்களை அடுத்து 21 நாட்களாக செல்வச் சந்நிதி கோயில் பூஜைகள் இன்றிக் கிடக்கின்றது.

கோயிலுக்கு மக்கள் செல்ல அச்சம் கொண்டுள்ளனர்.

## சுபநேரம்

17--4--1986

வியாழக்கிழமை

சுபநேரம்:
7.34 முதல் 9 04 வரை

ராகுகாலம்:
1 34 முதல் 3 04 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

மரண அட்டமி
பின் இரவு 1.12 வரை

## மகுடி ராகத்தில் மயங்கிய சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

நயினாதீவு ஆயுதப்படை முகாமில் நாதஸ்வரக் கச்சேரி. மகுடி ராகத்தில் மயங்கினர் சிப்பாய்கள்.

இது பற்றி அறியப்படுவதாவது:-

கடந்த திங்கட்கிழமை நண்பகல் குறிகாட்டுவானில் இருந்து அனலைதீவை நோக்கிச் சென்று கொண்டு இருந்தது பயணிகள் படகு ஒன்று.

நாதஸ்வரக் கோஷ்டி ஒன்றும் படகில் சென்றது.

நயினாதீவு ஆயுதப்படை முகாம் பாலத்தில் பயணிகள் அனைவரும் சோதனை இடப்பட்டனர்.

அச்சமயம் சுமார் 65 வயது மதிக்கத்தக்க வயோதிபரிடம் இருந்து தீவிரவாத இயக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தஹநாயக்கா மீது ஒழுங்கு நடவடிக்கை

### ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 17

அக்மீமன பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளத் தவறியதற்காக காலி எம்.பியும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான டாக்டர் விஜயானந்த தஹநாயக்கா மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவே இதனை அறிவித்திருக்கிறார்.

அக்மீமன இடைத்தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே திரு. ஜெயவர்த்தன இதனை அறிவித்தார்.

அக்மீமன இடைத்தேர்தல் தொடர்பான எந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க விமானங்கள் நேற்று மீண்டும் திரிபோலி மீது பறந்து சுட்டன

திரிபோலி, ஏப். 17

லிபியாவின் தலைநகரான திரிபோலியில் நேற்று துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

கேணல் கடாபியின் தலைமையகப் பகுதியில் சூட்டுச் சத்தங்கள் கேட்டன என்று தெரிவிக்கப் பட்டது

அமெரிக்க யுத்த விமானங்கள் திரிபோலிமீது தாழப்பறந்து சென்று அப்பகுதியில் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இயந்திரத் துப்பாக்கியால் சுட்டதாக லிபிய அரசாங்க அதிகாரிகள் தெரிவித்தனர்

லிபியா மீதான அமெ

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## இந்தி திரை உலகிற்கு சுஹாசினி போகாதது ஏன்?

இந்தி திரைப்பட உலகிற்குப் போனால் செக்ஸியாக டிரஸ் போட வேண்டியிருக்கும் அதனால்தான் நான் இந்திப்படவுலகுப் பக்கம் தலைவைக்க விரும்பவில்லை.

இப்படிக் கூறினார் நடிகை சுஹாசினி

நடிகை சுஹாசினியிடம் சில கேள்விகள் கேட்கப்பட்டன. துடிப்புடன் சிறிவிழுந்து பதிலளித்தார் அவர்.

ஹாசினி! தெலுங்குப் படத்தைப் பொறுத்தவரை நீங்க ரொம்ப தாராளமாக (செக்ஸி) கவர்ச்சியா நடிக்கிறதா சொல்றாங்க. தமிழில் அந்த மாதிரி நடிக்க மறுத்து வேஷம் போடுறாங்கன்னு சொல்றாங்க உண்மை என்ன? மனம் விட்டு சொல்லுங்க?

நான் செக்ஸியா நடிக்கிறேன் எனச் சொல்றது பொய்! தமிழ் படங்களில் மாடர்ன் டிரஸ் எல்லாம் போட்டு நடிக்கிறேன். தெலுங்கில் இந்த மாதிரி பாண்ட் போட்டு நடித்தால் என்னை ஒப்புக் கொள்ள மாட்டாங்க! இங்கே தமிழில் ஆடிப்பாடுவது மாதிரி தான் அங்கேயும் ஆடிப்பாடுறேன் அங்கே டுயட் பாடற தக்குக்கூட புடவை தான். பூவே பூச்சூடவா தெலுங்கில் நான் தான் நடிச்சேன்! நதியா லைட் வேட் ஸ்டாண்ட் சரிட்டில் ஒத்துக் கொண்டவர்கள் என்னை மறுத்திட்டாங்களே!

பேசிக்கலா நான் கிளாமர் ரோலுக்கு ஏற்றவள் அல்ல! இப்படி இருக்கும் போது நான் செக்ஸியாக நடிக்கிறேன்னு சொல்வது எவ்வளவு பெரிய அபத்தம் தெரியுமா? ஏன் இப்படி சொல்றாங்க என்பதும் புரியலே.

நான் ஏன் செக்ஸியாக நடிக்கணும்? எனக்கு அப்படி ஒன்னும் விதி இல்லே எந்தக் காலத்திலும் நான் அப்படி நடிக்க மாட்டேன் இப்படி — பொரிந்து தள்ளினார் சுஹாசினி

தினசரி சினிமா

## தமிழ்நாட்டிலிருந்து ஆயுதங்கள் கடத்தல் தொடர்கிறது என்கிறார் லலித்

கொழும்பு, ஏப்ரல் 17 தமிழ் நாட்டில் இருந்து ஆயுதங்களை இலங்கைக்குக் கடத்துவது இன்னும் குறைந்தபாடாக இல்லை.

இப்படி தேசியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி சொன்னார்.

கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இத்தகவலை அமைச்சர் வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;

தமிழ் நாட்டில் உள்ள ராமேஸ்வரம், வேதாரணியம் ஆகிய இடங்களில் இருந்து ஆயுதங்களை தீவிரவாதிகள் இலங்கைக்குக் கொண்டு வருவது தொடர்ந்து கொண்டுதான் உள்ளது.

இவற்றில் சில ஆயுதங்கள் நவீனமயமானவை.

கடத்தப்படும் ஆயுதங்கள் தமிழ்த் தீவிரவாதிகளின் கைகளுக்கு மட்டும் போகவில்லை; வேறு சிலரையும் சென்று அடைகின்றன.

ஆயுதங்களைக் கொண்டு போகும் படகுகளையும் ஆயுதங்களைக் கொண்டு வரும் படகுகளையும் எமது கடற்படையினரால் இலகுவில் அடையாளம் காண முடிகின்றது.

இப்படி அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார்.


## LANKA CEMENT LIMITED

KANKESANTHURAI.

## ஏல விற்பனை

பாவிக்கப்பட்ட துண்டுக் கம்பிகள், முறுக்குக் கம்பிகள், 'ஆங்கிள் அயன்கள்' (Angle Iron) "I" வடிவ உருக்குத் திராந்திகள், ஆயுதங்கள் என்பன 1986-04-20 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் லங்கா சிமேந்து லிமிட்டெட் தொழிற்சாலையில் ஏல விற்பனையில் விடப்பட உள்ளன.

மேற்படி பொருட்களைப் பார்வையிட விரும்பும் கொள்வனவாளர்கள் 1986-04-19 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 4-00 மணி வரை தொழிற்சாலை வளவில் பார்வையிடலாம்.

பொருட்களின் விலையின் 3ஆம் கூற்று முடிவடைந்த உடன் முழுத்தொகையின் 1;3 பகுதிப் பணம் கொள்வனவாளரால் செலுத்தப்பட்டு, மிகுதி அடுத்த 24 மணி நேரத்தில் செலுத்தப்பட வேண்டும்.

பொருட்கள் பகுதி பகுதியாகக் கொள்வனவு செய்வோர் ஏல விற்பனைத் திகதியான 20-4-1986 இல் இருந்து 02 நாட்களுக்குள்ளும் முழுக் கூறுகளும் ஒன்றாகக் கொள்வனவு செய்வோர் மேற்குறிப்பிட்ட தினத்தில் இருந்து (5) ஐந்து நாட்களுக்குள்ளும் விற்கப்பட்ட பொருட்களை அகற்றவேண்டும்.

பொது முகாமையாளர்,
லங்கா சிமேந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

16-04-1986.


★ பதிலடி கொடுக்கும்போது

# மக்களுக்கு பாதிப்பு: தவிர்க்கமுடியாத நிலை

## பாதுகாப்புஉயர்அதிகாரி தமிழ்ப்பகுதி நிலையை விளக்குகிறார்

கொழும்பு, ஏப்ரல் 17 வடக்கு,கிழக்குப் பகுதிகளில் தீவிரவாதிகளுக்கு எதிராக ஆயுதப் படையினர் எடுக்கப்போகும் நடவடிக்கைபற்றி முன்கூட்டி எந்த எச்சரிக்கையும் வழங்கப்பட மாட்டாது.

இதனால் தீவிரவாதிகளுக்குப் பதிலடி கொடுக்கும் நடவடிக்கையின் போது மக்களும் பாதிப்படைய நேரிடலாம். எனினும் இது தவிர்க்க முடியாததாகும்.

இப்படி பாதுகாப்பு வட்டாரத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் கொழும்பில் வைத்து விடுத்த செய்தியில் கூறினார்.

அந்த உயர் அதிகாரி மேலும் சொன்னதாவது;

நாட்டில் அமைதி சீர்குலைந்து செல்கிறது. தீவிரவாதிகள் ஆயுதப் படை முகாம்களுக்கு அருகில் ஒளித்து இருந்து படையினரைத் தாக்கத் தொடங்கியுள்ளார்கள்.

இதற்கான தகுந்த பதிலடி நடவடிக்கைகளே வடபகுதி முகாமிற்கு அருகில் வைத்து எடுக்கப்பட்டு வருகின்றன.

### மக்கள் உதவி

தீவிரவாதிகள் ஆயுதப் படையினருக்கு எதிராக எடுக்கப்போகும் சகல நடவடிக்கைகள் குறித்தும் அப்பகுதி மக்களுக்கு முன்கூட்டித் தெரிந்திருக்கிறது.

தீவிரவாதிகளுக்கு நேரிலோ, மறைமுகமாகவோ பொதுமக்கள் உதவி புரிவது இதன்மூலம் தெரிய வந்துள்ளது.

தீவிரவாதிகள் ஆயுத முனையில் தங்களைப் பயமுறுத்துவதாக சிலர் கூறுகின்றனர். அவர்களுக்கு நாம் ஒன்று கூறுகின்றோம் நிராயுதபாணிகளான அப்பாவி மக்கள் வீறுகொண்டு எழுந்தால் தீவிரவாதிகளை ஒழித்துக் கட்ட முடியும்.

தேடுதல் நடவடிக்கைக்கு ஆயுதப் படையினர் புறப்படும்போது தீவிரவாதிகள் நேரில் போரிட முன்வருவது இல்லை. ஒளித்து இருந்து தாக்குகின்றனர். இதனால் ஆயுதப்படையினருக்கு உயிர்ச்சேதம், காயங்கள் விளைவிக்கப்படுகின்றன. திருப்பித் தாக்கும்போது அப்பகுதி மக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க மாற்று நடவடிக்கை எடுக்க முடியாது உள்ளது.

இதுவரை காலமும் ஆயுதப் படையினரின் நடவடிக்கையை இடைநிறுத்தி வைத்ததற்கு எமது கண்டிப்பான கட்டுப்பாடுதான் காரணம்.

### யாழ்ப்பாணப் பத்திரிகைகள்

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் தமிழ் பத்திரிகைகளை நான் பாராட்டுகிறேன். தீவிரவாதிகள் ஆயுதப்படையினரை மிரட்டி அடித்ததுபோல் யாழ் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவருகின்றன பொறுப்பற்ற விதமாக பத்திரிகைகள் நடந்தால் தகுந்த நடவடிக்கை எடுப்பதில் பின்னிற்க மாட்டேன்.

நடப்பதை எழுதுங்கள் உண்மைக்குப் புறம்பானதை எழுதாதீர்கள். யாழ்ப்பாணப் பத்திரிகைகள் தீவிரவாதிகளுக்கு பக்கபலம் என்பது புரிகிறது.

தீவிரவாதிகளின் துப்பாக்கிகள் ஒருசில மணி நேரமே செயல்படும். ஆயுதப்படையினர் துப்பாக்கி ஏந்தினால் அதன் முடிவு என்ன என்பதை தீவிரவாதிகள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தீவிரவாதிகள் வடக்கு கிழக்கு மக்களை ஏமாற்றுகிறார்கள். மக்கள் இவர்களை நம்பி ஏமாறக் கூடாது. மக்களின் உடைமைகள் சூறையாடப்படுகின்றன இதுபற்றி எந்த வித முறைப்பாடுகளும் பொலிஸ் நிலையத்திலோ, ஆயுதப்படை முகாமிலோ பதியப்படுவது இல்லை.

தீவிரவாதத்துக்கு நாட்டில் இனியும் இடமளிக்கப்படமாட்டாது.

நாட்டு மக்களை பீதியில் இருந்து காப்பது எமது கடமை.

நிலக் கண்ணிவெடிகளையோ, கடல் கண்ணிவெடிகளையோ வெடிக்க வைத்து ஆயுதப் படையினரை பயமுறுத்த முடியாது,

பேச்சுக்களுக்கு முட்டுக்கட்டை தீவிரவாதிகளே.

வடக்கு, கிழக்கு மக்களை அநியாயமாகப் பலிவிட்டு தப்பி ஓடுவதே தீவிரவாதிகளின் நோக்கம்.

வடக்கு, கிழக்குப்பகுதி மக்கள் இதை வெகுவிரைவில் உணருவர். இப்படி அந்த உயர் அதிகாரி சொன்னார்.

## வீதி புனரமைப்பு ரூ. 50 ஆயிரம் செலவில்

பருத்தித்துறை,ஏப்ரல் 17 கற்கோவளம் வல்லிபுரம் தீர்த்தக் கடற்கரை வீதி ரூபா 50,000 செலவில் திருத்தி அமைக்கப்படவுள்ளது

கற்கோவளம் பகுதி மீனவர் நன்மை கருதியும், வல்லிபுர ஆழ்வார் ஆலய பக்தர்களின் நன்மை கருதியும் இவ்வீதி உடனடியாகத் திருத்தி அமைக்கப்படவுள்ளதென யாழ்ப்பாண அபிவிருத்திச் சபை புலோலி உப அலுவலக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. செ.கனகசபாபதி தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டிலிருந்து எடுத்த

# 22 பஸ்களையும் திருப்பி அனுப்புமாறு வற்புறுத்து

யாழ்ப்பாணம். ஏப். 17.

1983 இல் யாழ் குடாநாட்டில் இருந்து கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்ட 22 பஸ்களை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கும்படி வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு எஸ் கனகரத்தினம் மேலிடத்தைக் கேட்டுள்ளார்.

1983 இல் யாழ்ப்பாணத்தில் இருந்த 42 பஸ்களை இ. போ. ச. தலைமைப்பீடம் கொழும்புக்கு திருப்பி எடுத்தது இவற்றில் 20 பஸ்கள் மாத்திரமே இதுவரை யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் அனுப்பிவைக்கப்பட்டன.

இன்னும் 22 பஸ்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அந்த பஸ்களை எடுக்கும் முயற்சியில் வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு எஸ். கனகரத்தினம் ஈடுபட்டுள்ளார்.

திரு. கனகரத்தினம் அண்மையில் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது சந்தித்தார். அப்போது, கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு போக்குவரத்துச் சபைகளுக்கு எடுத்துச் சென்ற மிகுதி 22 பஸ்களையும் தந்தால்மட்டுமே வடபிராந்திய போக்குவரத்து சபையைச் சீராக இயங்கச் செய்ய முடியும் என்று அவர் அமைச்சரிடம் வலியுறுத்திக் கூறினார்.

## படையினர் நடவடிக்கையால் ஆலயங்கள் புனிதத்தன்மை இழப்பு

### இந்து மத ஸ்தாபனங்கள் கவலை

மட்டக்களப்பு, ஏப். 17 கிழக்கு மாகாணத்தில் ஆயுதபடையினரின் செயல்பாடுகளினால் இந்து ஆலயங்களின் புனிதத்தன்மை இழக்கப்படுவதாக இந்து மத ஸ்தாபனங்களும்,மத பிரமுகர்களும் கவலை தெரிவிக்கிறார்கள்

ஆயுதபடை முகாம் ஆலய சுற்றுடல்களில் அமைவதால் இப்புனிதத்தன்மை இழக்கப்படுவதற்கு பிரதான காரணமென அப்பிரமுகர்கள் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று வைத்தியசாலையில் தற்போது ஆயுதப்படை முகாமிருப்பதால் அங்குள்ள பிள்ளையார் ஆலயம் படையினரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சந்திவெளி மகாவிஷ்ணு ஆலயத்தின் புனிதத் தீர்த்தக் கிணறு அருகிலுள்ள முகாம் படையினர் பயன்படுத்துகிறார்கள். இவ் ஆலய மணித்தூண் படையினரின் காவல் கோபுரமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது புணானை பிள்ளையார் கோயில் மண்டபமும் படையினரால்சோதனைக் கூடமாக பயன்படுத்தப்படுகிறது.

இந்நிலையில் இந்த ஆலயங்கள் புனிதத் தன்மையை இழந்து வருவதாக அப்பிரமுகர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

### பொம்மைவெளி நாவாந்துறையில் தையல் நிலையங்கள்

நல்லூர், ஏப். 17. பொம்மைவெளி, நாவாந்துறை பகுதிகளில் புதிதாக இரண்டு தையல் நிலையங்கள் அமைக்கப் படவுள்ளன

இந்த நிலையங்களுக்குத் தேவையான ஆறு தையல் மெஷின்களை "யுனிசெவ்" நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது

இரண்டு தையல் நிலையங்களிற்கும் மூன்று மெஷின்கள் என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

இதன்மூலம் பத்துப் பேருக்கு வேலைவாய்ப்புக் கிட்டும்.

இந்த வாரத்தில் இந்த நிலையங்கள் திறந்துவைக்கப்படும் என யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி. [illegible] ஞானம் தெரிவித்தார்.

## அம்பாறையில் தெங்கு புனர் நடுகை

அம்பாறை, ஏப். 17. அம்பாறை மாவட்டத்தில் இந்த வருடம் 600 ஏக்கரில் தெங்குப் புனர் நடுகை மேற்கொள்ளப் படவிருக்கின்றது

மானியத் திட்டத்தின் கீழ் இந்த புனர் நடுகையை மேற்கொள்வதற்கு தெங்கு அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்தத் திட்டத்தின்கீழ் தெங்குச்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு, ஒரு ஏக்கருக்கு 4650 ரூபா மானியம் வழங்கப்பட விருக்கின்றது.

1978ஆம் ஆண்டு வீசிய சூறாவளிக்குப் பின்னர் இந்தமாவட்டத்தில் சுமார் நாலாயிரம் ஏக்கரில் தெங்குப்புனர்நடுகை மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

### வடபகுதி தபால்கள் தேக்கம்

நல்லூர், ஏப்ரல் 17 யாழ் தபால் நிலையத்தில் கடந்த சில தினங்களாக தபால் பொதிகள் தேங்கிக் கிடக்கின்றன. தபால்போக்குவரத்துக்களில் அடிக்கடி தடங்கல்கள் ஏற்படுவதே இதற்குக் காரணம்.

## கணவர் கதவு திறக்க அவர் நெஞ்சில் சூடு!

### மரண விசாரணையில் மனைவி

மட்டக்களப்பு, ஏப். 17. சம்பவதினம் இரவு ரி. வி. பார்த்துக் கொண்டிருந்த சமயம் கதவு தட்டும் சத்தம் கேட்டது. கணவர் சென்று கதவை திறக்க நெஞ்சில் சூடு விழுந்தது.

மேற்கண்டவாறு கடந்த சனிக்கிழமை இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியான மட்டக்களப்பு புகையிரத நிலைய நேரக்காப்பாளரான களுதெகுமார ஆராய்ச்சிகே போல்பிள்ளை (48 வயது) என்பவரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த மனைவி யூலியற் சில்வா (47 வயது) தெரிவித்தார்.

நகர மரணவிசாரணை அதிகாரி திரு த கிரி நாதன் விசாரணையை மேற்கொண்டார்.

சாட்சி தொடர்ந்து சாட்சியமளிக்கையில்

எமது குடும்பத்தில் 5 பிள்ளைகள்.

சம்பவதினம் இரவு 6-30 மணியளவில் எல்லோருமாக டெலிவிஷன் பார்த்துக் கொண்டிருந்த சமயந்தான் இச்சம்பவம் இடம்பெற்றது என்றார்.

பிரேதபரிசோதனையை பதில் சட்ட வைத்திய அதிகாரி செல்வி ரோகிணி மூத்ததம்பி மேற்கொண்டார்.

விசாரணை முடிவில் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது

### கைதிகளுக்கு புத்தாண்டு பார்சல்கள்

கொழும்பு, ஏப் 17 பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 100 தமிழ் இளைஞர்களுக்கு புத்தாண்டுப் பொருள்கள் கொண்ட பார்சல்களை வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

சாப்பிடக்கூடிய பொருள்கள் உள்ள பார்சல்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்று சிறைச்சாலைவட்டாரங்கள் தெரிவித்தன.

### சம்பள உயர்வு கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, ஏப் 17 கிராம அபிவிருத்தி அதிகாரிகளின் சம்பள உயர்வுக் கோரிக்கையை நிதி அமைச்சர் ரொனி டி மெல் நிராகரித்து விட்டார்.

கிராம அபிவிருத்தி அமைச்சர் திருமதி. விமலா கன்னங்கரா சம்பள உயர்வுக் கோரிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்திருந்தார்.

சம்பள உயர்வுக்கான விசேட காரணங்கள் எதுவும் கூறப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி நிதி அமைச்சர் கோரிக்கையை நிராகரித்து விட்டார்.

### ஆசிரியையுடன் இயங்கும் பாடசாலை

தாளையடி, ஏப் 17 ஏழு வகுப்புக்களைக் கொண்ட வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க பாடசாலை ஒரே ஒரு ஆசிரியையுடன் பல வருடங்களாக இயங்கி வருகின்றது.

இப்பாடசாலையில் பாலர் வகுப்புத் தொடக்கம் 6 ஆம் வகுப்பு வரை வகுப்புக்கள் உள்ளன

இங்கு கற்கும் மாணவர்களில் பலர் றோமன் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்களாக உள்ள போதிலும், றோமன் கத்தோலிக்கத்தை கற்பிப்பதற்கும் ஆசிரியர் இல்லை என பெற்றோர் புகார் செய்கிறார்கள்.

### முஸ்லிம் மஜ்லிஸ் மாநாடு

மட்டககளப்பு. ஏப். 17 கிழக்கிலங்கை முஸ்லீம் மஜ்லிஸ் 2வது மகாநாடு எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் நிந்தவூரில் நடைபெறும்.

கிழக்கு மாகாண முஸ்லீம்கள் இன்றைய சூழ்நிலையில் எதிர்நோக்கும் அரசியல், சமூக, பொருளாதார பிரச்சினைகள் உட்பட பல்வேறு முக்கிய விவகாரங்கள் இம்மகாநாட்டில் ஆராயப்படுமென தெரியவருகிறது.

### திருமலையிலுள்ள அகதிகளுக்கு தொழிற் பயிற்சி

திருகோணமலை,ஏப்ரல் 17 திருகோணமலையில் உள்ள தமிழ் அகதிகளாக உள்ள இளம்பெண்களுக்குத் தொழிற் பயிற்சி வழங்க திருகோணமலை ரோட்டரிக் கழகம் முன்வந்துள்ளது.

இரண்டு தையல் இயந்திரங்களை திருகோணமலை சென்யோசப் கல்லூரியில் உள்ள தமிழ் அகதிகள் முகாமுக்கு, ரோட்டரிக் கழகம் அன்பளிப்புச் செய்துள்ளது


உடன் தேவை

கிரைண்டிங் மில்லில் 5 வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ள திறமையான டிரைவர் உடனே தேவை தங்குமிட வசதி உண்டு நேரில் வரவும்: Manju Grinding Mill, Puliankoodal Junction, Kayts.


## 45ஆம் நாள் நினைவஞ்சலி

17 - 04 - 1986

பாரில் உதிப்பு: 14 — 12 — 1961



பாதகர் வதைப்பு: 04 — 03 — 1986

செல்வன் நீதிராஜா மோகனதாசன்

நெஞ்சம் என்றும் மாறுது
உன் நினைவு என்றும் தீராது
கொஞ்சும் உன் குரல் கேட்க
மிஞ்சுதையா எம் ஆசை
காலம் பதில் சொல்லும்
கர்த்தர் அதைப் பார்த்திடுவார்.

உம் பிரிவால் வாடும்,
அம்மா, ஐயா, அண்ணுமார்,
அக்காமார், தம்பி, அண்ணிமார்,
பிள்ளைகள்.

103, சேவிஸ் றோட்,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

அறிவு என்பது புத்தக அடிப்படையில் கற்று ஆராய்ச்சி பூர்வமாக வளர்க்கப்படுவது. ஞானம் என்பது தன்னுள் தானே உணர்ந்து தெரிந்து கொண்டு தன்னை வளர்த்துக் கொள்வது தன்னையே முழுமையாகப் புரிந்து கொண்டு ஆத்மபலம் பெறுவது.

-சுவாமி தபஸ்யானந்தஜீ.

உதயன்

உண்மை - அறிவாலம் - தமிழ் தினசரி

இல. 16, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073

17-04-86 உ. இல. 28

## இன்றைய தேவை

யாழ்ப்பாண நகரில் குழாய் நீர் விநியோகம் பாதிக்கப்படும் அபாயம் உண்டாகியிருக்கிறது. சில பகுதிகளுக்கான குழாய் நீர் விநியோகத்தை துண்டிக்க வேண்டிய கட்டாயம் உருவாகி உள்ளது

இவ்வாறு யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி கே சிவஞானம் அறிவித்திருக்கிறார்.

மேற்சொன்ன இரண்டு நிலைமைகளும் உருவாகுவதற்கு சட்டவிரோதக் குழாய் நீர் பாவனையே காரணம் என்று ஆணையாளர் தெளிவுபடுத்தி உள்ளார்

சட்டமும் ஒழுங்கும் சீராக இல்லாத இன்றைய சூழ்நிலையைப் பயன்படுத்திப் பலர் தாம் விரும்பியவாறு சட்டவிரோதக் குழாய் நீர் தொடர்புகளைப் பொருத்தி உள்ளனர். கண்டகண்ட மாதிரி குழாய்கள் பொருத்தப் பட்டதால் ஏற்கனவே பாவனையில் இருந்த குழாய்களில் தண்ணீர் வருவதில்லை

குடிதண்ணீர் வசதி இல்லாத இடங்களுக்கே குழாய்கள் பொருத்தப்பட்டன. சட்ட விரோதத் தொடர்புகளால் அந்தப் பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வீதிகளில் உள்ள குழாய்களில் தண்ணீர் வருவது குறைந்து விட்டது.

பணவசதி படைத்த ஒரு சிலரின் சட்ட விரோத நடவடிக்கையால் வசதி குறைந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் பாதிக்கப் படுகிறார்கள்.

வடபகுதியில் இப்போது சட்டமும் ஒழுங்கும் இல்லை. சிவில் நிர்வாகம் ஸ்தம்பித்து விட்டதால் இந்த நிலைமை. அதனைச் சிலர் துஷ்பிரயோகம் செய்வதால் மக்களைப் பாதிக்கும் சட்டவிரோத நடவடிக்கைகள் மலிந்து விட்டன.

ஒரு துறையில் என்று அல்ல, அன்றாட வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சட்ட விரோதமும், சமூக விரோதமும், ஜனநாயக விரோதமுமான சம்பவங்களும், நடவடிக்கைகளும் மலிந்துவிட்டன.

தட்டிக் கேட்க யார் இருக்கிறார்கள். எங்களை யார் என்ன செய்ய முடியும் என்ற செருக்கும், மிடுக்கும் பெரும்போக்கும் யாழ்ப்பாண சமூகத்தில் பரந்து படர்ந்து விட்டன.

புற்றுநோய் போல சமூகத்தின் ஆரோக்கியத்தை அவை கெடுத்து வருகின்றன.

தமக்குள்ள செல்வாக்கை வைத்துக் கொண்டு சட்டவிரோதமான, அநியாயமான அலுவல்களைச் செய்ய முடியும் என்ற நிலை மேலோங்கி வருகிறது

இது சமூக நீதியை அழித்து விடும். எதிர்காலத்தில் காட்டுநீதி தான் இந்த மண்ணில் மிஞ்சுமோ என அஞ்சுமளவுக்கு நிலைமை சீர்கெட்டு வருகிறது.

அப்படி ஒரு நிலைமை வரக்கூடாது; வராது தடுக்கப்பட வேண்டும்

காட்டுநீதி — பலம் உள்ளவர்களும் — பணம் உள்ளவர்களும் — வேறுவித செல்வாக்கு உள்ளவர்களும் ஏனையோரை அடக்கி ஒடுக்கும் போக்கு — தடுக்கப்பட்டாக வேண்டும்.

அதனைச் செய்யும் பொறுப்பு சமூகத்தில் உள்ள பெரியவர்களுக்கு மட்டுமன்றி இளைஞர்களுக்கும் உண்டு. பலவித தியாகங்களைச் செய்யும் இளைஞர்கள் வருங்காலம் வரண்டு போகாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பண்பு மிகுந்த — நீதியையும் ஒழுங்கையும் பேணும் ஒரு சமுதாயத்தை உருவாக்க அவர்கள் பெருமளவில் உழைக்க வேண்டும் இது இன்றைய அவசரத் தேவை.

## கீரிமலை பிரஜைகள் குழுவின் பணிகள்
### கூட்டத்தில் பிரஸ்தாபம்

காங்கேசன்துறை.ஏப்.17

கீரிமலை பிரஜைகள்குழு ஒரு வருட காலத்தில் நல்ல சேவையாற்றியுள்ளது.

கீரிமலைப்பிரதேசத்தை பழையநிலைக்கு கொண்டு வர நாம் எடுத்த நடவடிக்கைகளுக்கு இப்பகுதி மக்கள் ஆதரவு கொடுத்துள்ளனர். எதிர்காலத்திலும் இந்த ஆதரவு எங்களுக்கு இடைக்க வேண்டும்.

கீரிமலைப் பிரஜைகள் குழு வருடாந்தக்கூட்டத்தில் மீண்டும் தலைவராக தெரிவு செய்யப்பட்ட திரு. க. சுந்தரமூர்த்தி மேற்கண்டவாறு கூறினார்.

கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயத்தில் நடந்த இக்கூட்டத்தில் தலைவராக திரு. க. சுந்தரமூர்த்தியும், இணைச்செயலாளர்களாக திரு. சு. யோகலிங்கமும், திரு. க. யோகராசாவும், பொருளாளராக திரு. ந. தனபாலசிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆறுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

### மக்கள் சுகாதார குழுவுக்கு அன்பளிப்பு

காங்கேசன்துறை,ஏப்.17

மல்லாகம் மக்கள் சுகாதாரக் குழுவுக்கு பெறுமதிமிக்க அலுமாரி ஒன்றை அன்பளிப்பு செய்து மரக்கன்றுகளையும் நட்டார் சிவதர்ம வள்ளல் கனகராசா.

சுகாதாரக் குழுவின் விசேஷகூட்டம் டாக்டர் ஆ. சிவபாதம் தலைமையில் நடந்தது.

அச்சமயம் அதில் கலந்துகொண்ட சிவதர்ம வள்ளல் இது போன்ற சுகாதாரக் குழுக்கள் கிராமங்கள் தோறும் அமையவேண்டும் என்றும், அவற்றுக்கு எம்மால் உதவிகளை வழங்க முடியும் என்றும் கூறினார்.

# பயங்கரவாதம் கொடுமைமிக்கது
## பாரதப் பிரதமர் கண்டனம்

புதுடில்லி,ஏப்ரல் 16

சில நாடுகள் படுமோசமான பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பலியாக்கப்படுவது குரூரமான கொடுமையாகும்.

மேற்கண்டவாறு பிரதமர் ராஜீவ் காந்தி பயங்கரவாதத்தைக் கண்டித்துப் பேசியுள்ளார்.

அணிசேரா நாடுகளின் இணைப்புப் பணிப்பிரிவின் அமைச்சர்கள் மட்ட மாநாட்டை அவர் ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

அவர் தமது உரையின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுத் தொடர்ந்து உரையாற்றுகையில்;

பயங்கரவாதம் பல நாடுகளுக்கும் பரவியுள்ளது. பாரதம் இந்த நடவடிக்கைகளின் மோசமான அறிவிழந்த கட்டத்தையும் அனுபவரீதியாக உணர்ந்துள்ளது

பயங்கரவாதத்தை ஒரு நாடு ஊக்குவிப்பது அல்லது முடுக்கிவிடுவது என்பது பயங்கரவாதத்தை அங்கீகரிப்பதாகவே கருதப்படும்.

பயங்கரவாதத்துக்கெதிராக சர்வதேச அங்கீகாரம் பெற்ற கோட்பாடுகளுக்கிணங்க நாடுகள் நடந்து கொள்ள வேண்டும்.

பயங்கரவாதம் என்று நாம் கண்டிக்கும் அதே வேளையில் அரச பயங்கரவாதத்தையும் நாம் கடுமையாகக்கண்டிக்கிறோம்.

சட்ட ஒழுங்குகளைப் பயங்கரவாதம் மீறுகிறது என்று கூறும் அதேவேளை சர்வதேச சட்டங்களை பயங்கரவாதிகளை விட மோசமாக மீறுவதற்கு ஒரு அரசுக்கு உரிமை இருக்க முடியாது என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும் என்றார்.

### கோர்பச்சேவ் எழுத்தாளர் ஆகிறார்

வாஷிங்டன், ஏப் 16

சோவியத் தலைவர் திரு. மிக்கேயல் கோர்பச்சேவ் எழுத்தாளர் ஆகிறார்.

1981 இல் இருந்து இன்று வரையான அமெரிக்க – சோவியத் தொடர்புகள் பற்றித் தான் திரு கோர்பச்சேவ் புத்தகம் ஒன்றை எழுதுவது பற்றி தீவிரமாகச் சிந்தித்து வருகிறார் என்று 'வாஷிங்டன் போஸ்ட்' செய்தி வெளியிட்டது.

## உச்சி மாநாட்டை ரத்துச் செய்யுமாறு மீண்டும் வலியுறுத்து

ரொறன்டோ, ஏப்ரல் 16

கைத்தொழில் நாடுகளின் உச்சிமாநாட்டை ரத்துச் செய்யும்படி ஜப்பானிய தீவிர இடதுசாரிக் குழு மீண்டும் எச்சரித்து உள்ளது

எட்டு பெரிய கைத்தொழில் நாடுகளின் உச்சி மாநாடு அடுத்த மாதத்தில் டோக்கியோவில் நடைபெறவுள்ளது.

"இது ஒரு யுத்தம். யாராவது கொல்லப்பட்டால்,ஒருவராலும் உதவ முடியாது" இப்படி தீவிரவாதக் குழுப் பேச்சாளர் மகோரோ மட்சு ரொறன்டோ குளோப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் சொன்னார்.

"உங்கள் நாட்டு (கனடா)ப் பிரதமருக்கு நான் விடுக்கும் எச்சரிக்கை. மாநாட்டில் கலந்து கொள்ள டோக்கியோ வராதீர்கள் என்பதே!" —இப்படியும் அவர் சொன்னார்

### இஸ்ரவேலை அங்கீகரிக்க கோரிக்கை

ரோம், ஏப்ரல் 16

இஸ்ரவேலை அங்கீகரிக்கும்படி பரிசுத்த பாப்பாண்டவருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இத்தாலிய யூதத் தலைவர்கள் இவ்வேண்டுகோளை விடுத்தனர்

இது சம்பந்தமாக உலக யூத காங்கிரஸ் ரோம் நகரில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

யூதாயிஸத்துடனான நல்லுறவை வளர்த்துக் கொள்ள எடுக்கப்படும் புதுமுயற்சி இது என்று வர்ணிக்கப்பட்டது.

**வெளி உலகில்**

### சீனாவில் படிப்பறிவற்றோர் 23 கோடி பேர்

பீகிங், ஏப். 16

சீனாவில் 23 கோடி மக்களுக்கு அதிகமானோர் படிப்பறிவற்றவர்கள் எழுத,வாசிக்க அவர்களுக்குத் தெரியாது.

படிப்பறிவற்றவர்கள் எண்ணிக்கை தினமும் கூடி வருகின்றது.

இப்படி சீன நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

பணக்கட்டுப்பாடும், தரமான ஆசிரியர் பற்றாக்குறையுமே இதற்குக் காரணம்.

கிராமப் பகுதிகளில் பெற்றோர் தம்பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது இல்லை. குடும்ப வருமானத்தைப் பெருக்குவதற்காக தங்களுடன் வேலைக்கு அழைத்துச் சென்று விடுகின்றார்கள். சீனாவில் தேசிய வரவு செலவுத்திட்டத்தில் 8 சதவீதம்தான் கல்வி வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்படி சைனா டெய்லி என்ற ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டது

# அமெரிக்காவுக்கெதிராக ஒவ்வொரு பிரஜைக்கும் ஆயுதம்
## நிக்கரகுவா ஜனாதிபதி அறிவிப்பு

மனகுவா, ஏப்ரல் 16

அமெரிக்க ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு ஒவ்வொரு பிரஜைக்கும் ஆயுதம் வழங்கப்படும்

இப்படி நிக்கரகுவா ஜனாதிபதி டானியல் ஒர்டேகா சொன்னார்.

விவசாயிகள் மத்தியில் பேசுகையில் ஜனாதிபதி சொன்னதாவது;

நிக்கரகுவாவுக்கு எதிரான அமெரிக்க ஆதரவிலான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டால், கொன்டாடோரா நாடுகளுடன் மத்திய அமெரிக்க சமாதான உடன்படிக்கை ஒன்றில் நிக்கரகுவா கைச்சாத்திடும்.

அமெரிக்க ஆதரவிலான ஆக்கிரமிப்பு தொடரும் வரை நிக்கரகுவாவில் ஆயுதக் குறைப்பு என்ற பேச்சே இருக்காது—

இப்படி ஜனாதிபதி சொன்னார்.

## வெளிநாட்டவருக்கு ஆஸி வரவேற்பு

சிட்னி, ஏப். 16

அடுத்த இரண்டு ஆண்டுகளில் மேலும் 21,000 வெளிநாட்டவர் ஆஸ்திரேலியாவில் நிரந்தரமாக குடியேற அனுமதிக்கப்படுவர்.

சனத்தொகை குறைந்துவரும் போக்கைத் தடுத்து நிறுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று ஆஸ்திரேலிய குடிவரவுத் திணைக்கள அமைச்சர் திரு. ஹர்போர்ட் சொன்னார்.

ஒவ்வொரு ஆண்டும் ஆஸ்திரேலியாவில் இருந்து 20,000 முதல் 25,000 பேர் வரையில் நிரந்தரமாக வெளியேறுகின்றார்கள். இந்த இடைவெளியை நிரப்ப வேண்டும்.

இப்படி அமைச்சர் ஹர்போர்ட் மேலும் சொன்னார்.

# லிபியா மீதான தாக்குதல் சமாதானத்துக்கு அச்சுறுத்தல்

'ஓநாய் வருகிறது! ஓநாய் வருகிறது!! என்று பகிடியாய்க் கூறிக் கொண்டுஇருக்கும்போது ஒருநாள் நிஜமாக ஓநாய் வந்தால் எப்படியிருக்கும்?

இந்த நிலைதான் கடந்த செவ்வாய் அதிகாலை லிபியாவுக்கு ஏற்பட்டது

பல காலம், பல தடவைகள் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்க அரசு லிபியாவை அடுத்தடுத்து எச்சரித்து வந்தது. பல சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

ஆனால் லிபியா அரசு அவற்றை சட்டை செய்யவில்லை.

வெறும் பூச்சாண்டி காட்டும் மிரட்டல்களாகவே லிபியா கருதியது.

ஆனால் வந்தது வினை!

அதிகாலை வேளையில் இருட்டோடு இருட்டாக வந்த அமெரிக்க விமானங்கள் லிபியாவின் தலைநகரான திரிப்போலியிலும் கிழக்கு நகரான பெங்காசியிலும் குண்டுகளை பொழிந்து விட்டுச் சென்றபோதுதான் லிபியா அதிர்ந்து முழித்தது.

அமெரிக்க விமானத் தாக்குதல் சுமார் 15 நிமிடநேரம் நீடித்தது.

லிபிய பாதுகாப்புத் தளங்கள் உஷாரடைந்து அமெரிக்க விமானங்களை குறிவைத்து ஏவுகணைகளை வீசின.

எனினும் ஏவுகணைத் தாக்குதல்கள் குறிப்பிடத்தக்களவு வெற்றி பளித்ததாகத் தெரியவில்லை

தாக்குதலின் விளைவுகள் எவ்வாறாகவும் இருக்கலாம்.

ஆனால் அரபு நாடு ஒன்றினுள் அமெரிக்க விமானங்கள் அத்துமீறி நுழைந்து அதன் தலைநகரில் அதிரடித் தாக்குதலை மேற்கொண்டது உலக அரங்கில் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கிறது

கம்யூனிஸத்தை ஒழிக்கிறேன் முதலாளித்துவத்தை ஒழிக்கிறேன் என்று கூறிக்கொண்டு உலக நாடுகளை தமக்குக் கீழ் அணி சேர்த்துக் கொண்டு – தமது படை வலிமையை அவற்றின் மீது பிரயோகித்து உலக நாடுகளின் முடிசூடா தலைமைத்துவம் என்ற எட்டாதகனியைப் பிடிப்பதற்கு மனப்பால் குடித்துக் கொண்டிருக்கும் நாடுகள் பல.

அந்த நாடுகளில் முன்னணியில் நிற்பது அமெரிக்கா

அமெரிக்காவின் போக்கிற்கு மாறாக மற்றொரு அணியில் நின்ற அரபு நாடு லிபியா.

தன்மீதும் தன்னுடைய ஆட்சியின் மீதும் அரசின் மீதும் மக்களுக்கு ஒருவித வெறிபோன்ற பிடிப்புணர்வை ஏற்படுத்தி அதன் மூலம் தன்னுடைய நிலையை ஸ்திரப்படுத்தி ஆட்சியை அலங்கரித்திருப்பவர் லிபியத் தலைவர் கேர்ணல் கடாபி

அவருடைய ஆட்சிக்கு எதிராக அமெரிக்க அரசு கண்டனம் எழுப்பி வந்ததும் லிபியா பதில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததும் தெரிந்த சங்கதிகள்.

ஜேர்மனியில் அமெரிக்க துருப்புக்கள் நடமாடும் இரவு கூதாட்ட விடுதி ஒன்றில் அநாமதேயக் குண்டு ஒன்று அண்மையில் வெடித்தது இதனால் அமெரிக்க சிப்பாய்கள் சிலர் கொல்லப்பட்டனர்.

சூதாட்ட விடுதியில் நிகழ்ந்த இந்தச் சம்பவம் உலக அரங்கில் பெரும் சூதாட்டம்' ஒன்றையே ஏற்படுத்தி விட்டது

இந்தச் சம்பவத்திற்கு லிபியாவே காரணம் என அமெரிக்கா குற்றம் சாட்டியது—

அதை லிபியா மறுக்க-

லிபியாவிற்கும் குண்டு வெடிப்பிற்கும் முழுத் தொடர்பு உண்டு என்பதை நிரூபிக்க போதியளவு ஆதாரம் இருக்கிறது. ஆகவே லிபியாவுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அமெரிக்கா சீறிப்பாய-

விடயம் ஆயுதப் போராட்டத்தில் இறங்கும் அளவுக்கு முற்றியது.

அமெரிக்க ஜனாதிபதி லிபியத் தலைவரை 'விசர் நாய்' என்றும் 'காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாத நடவடிக்

- வித்தி -

கைகளில் ஈடுபடுபவர்' என்றும் வர்ணிக்கும் அளவுக்கு நிலைமை முற்றியது

அமெரிக்கா அத்துடன் நிற்கவில்லை.

லிபியாவின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பதிலடி என்று கூறிக்கொண்டு அதன் தலைநகர்மீதே திடீரென அத்துமீறி அதிரடித்தாக்குதலை மேற்கொண்டிருக்கிறது.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட விமானங்களில் சில பிரிட்டனில் உள்ள அமெரிக்க தளங்களில் இருந்து புறப்பட்டது உலக அரங்கிலும் பிரிட்டனிலும் மேலும் சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கிறது.

இத்தகைய தாக்குதல்களுக்கு பிரிட்டன் அனுமதி வழங்கியதற்காக பிரிட்டிஷ் தலைமைப் பீடத்திற்கு நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் பலத்த எதிர்ப்புக்கிளம்பியிருக்கிறது.

இதேவேளை அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை அரபு உலகமும் [illegible], பல உலகநாடுகளும், உலக அமைப்புகளும் வன்மையாகக் கண்டித்திருக்கின்றன.

'அமெரிக்காவின் அடாவடித்தனம் இது' என ரஷ்யா வர்ணித்திருக்கிறது

'தாக்குதல் சம்பவம் பயங்கரவாதத்தை மேலும் தீவிரப்படுத்தும்' என்று கண்டித்திருக்கிறது அமெரிக்காவின் கூட்டாளியான இத்தாலி

அமெரிக்காவின் மற்றொருதோழமைநாடான பாகிஸ்தானும், இந்தியா, ஜோர்தான், சீனா, சிரியா, சுவீடன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் —

அணிசேரா நாடுகள் அமைப்பு போன்ற ஸ்தாபனங்களும் அமெரிக்காவின் இந்நடவடிக்கையைக் கடுமையாகக் கண்டித்திருக்கின்றன.

இந்த வயோதிப காலத்தில் அமெரிக்க ஜனாதிபதி றேகன் துணிந்து செய்திருக்கும் இந்த 'சாகஸ' செயல் அவருக்கு திரும்பி மூக்குடைக்கும் செயலாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

உலக நாடுகள் மத்தியில் அவரது நடவடிக்கைக்கு கிளம்பியிருக்கும் எதிர்ப்பு இப்படிப்பட்ட ஓர் ஊகத்தைத் தான் எழுப்பியிருக்கிறது

லிபியாவின் மீதான அமெரிக்க தாக்குதல் உலக சமாதானத்துக்குப் பெரும் அச்சுறுத்தல் ஆகும்.

# மாநகரசபை ஆலோசனை சபையில் கிராமோதய தலைவர்கள்
## தீர்மானம் நிறைவேற்றம்

மட்டக்களப்பு,ஏப்ரல் 17

மட்டக்களப்பு மாநகர சபையில் மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாதிருப்பதால் சபையின் ஆலோசனைச் சபையில் அப்பகுதி கிராமோதய தலைவர்கள் அங்கத்துவம் வகிக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்

மேற்கண்ட தீர்மானம் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சபையின் தலைவர் திரு. ம சிவநேசராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

மட்டக்களப்பு நகரில் குழாய் நீர் சில மணித்தியாலம் மட்டும் வழங்கப்படுகின்றது இது போதுமானதாக இல்லை. சனத்தொகைப் பெருக்கத்திற்கேற்ப இக்குழாய் நீர்த் திட்டம் உடனடியாக விஸ்தரிக்கப்பட வேண்டும்.

கடல் பாதுகாப்பு வலயத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

பாதுகாப்பு காரணங்களால் தபால் நிலையங்களில் முத்திரைக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. பொதுமக்கள் இதனால் பாதிக்கப்படுகின்றார்கள். ஆதலால் தனியார் தபால் நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்

மேற்படி தீர்மானங்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன

## புங்குடுதீவில் கும்பாபிஷேகம்

புங்குடுதீவு, ஏப். 17

புங்குடுதீவு கிழக்கு தல்லைய பற்று ஸ்ரீசங்கர மூர்த்தி முருகமூர்த்தி ஆலய மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 25ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

இதற்கான பூர்வாங்க கிரியைகள் இம்மாதம் 21ம் திகதி ஆரம்பமாகவுள்ளன. சிவஸ்ரீ நா. சர்வேசக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் இக்கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்தவுள்ளனர்.

இம்மகா கும்பாபிஷேகத்தின் இறுதியில் நல்லூர் ஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபால கிருஷ்ணன் ஆகியோர் ஆசியுரை கூறுவர்.



### பொய்யாமொழி

குறள்:

ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்.

பொருள்:

தீயசொற்களின் பொருளால் விளையும் தீமை ஒன்றாயினும் ஒருவனிடம் உண்டானால், அதனால் மற்ற அறங்களாலும் நன்மை விளையாமற் போகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

O/L DAY CLASSES
O,L மாலை வகுப்புக்கான
புதிய பிரிவு
நடைபெறுகின்றன
நொதேண் இன்ஸ்ரிரியூட்
சுண்டுக்குளி.

# உதயன்

17 04 1986 வியாழக்கிழமை

A/L 86
விஞ்ஞான வகுப்புகள்
புவியியல்: திரு. குணராஜா
ஆரம்பம்: 19—04—86
அளவையியல்: திரு. கேசவன்
ஆரம்பம்: 23—04—86
விபரங்கட்கு:
நொதேண் இன்ஸ்ரிரியூட்
சுண்டுக்குளி.

மீண்டும் பேச்சு நடத்துவது பற்றி

## இந்திய கருத்து அறிந்த பின்னர்தான் முடிவு எடுப்போம்

-உமா

சென்னை, ஏப்ரல் 17

புதிய யோசனைகள் குறித்து இந்தியாவின் கருத்தை அறிந்தபின்னர் தான் மீண்டும் பேச்சுக்கள் நடத்துவது பற்றி முடிவு செய்யலாம்.

இப்படி திரு ரொமேஷ் பண்டாரியிடம் சொன்னதாக தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபர் திரு. உமா மகேஸ்வரன் சொன்னார்.

சென்னையில் திரு பண்டாரியை தனியே சந்தித்து திரு. உமாமகேஸ்வரன் பேசினார்.

திருகோணமலைப் பகுதியில் இருந்து தமிழர்கள் துரத்தப் பட்டுவிட்டார்கள். காணிகள் பறிபோகின்றன.

யாழ் குடாநாட்டில் நிலைமை இன்னும் மோசமாகிக் கொண்டிருக்கிறது — இத்தகவலை திரு பண்டாரியிடம்எடுத்துச் சொன்னேன்.



உமாமகேஸ்வரன்

புதிய யோசனைகள் குறித்துமீண்டும் புதிதாக பேச்சுக்களை நடத்த முடியுமா? என்று திரு. பண்டாரி கேட்டார்.

முதலில் புதியயோசனை குறித்து இந்தியக் கருத்தை அறிந்து கொள்ள வேண்டும். அதன் பின்னரே, மீண்டும் பேச்சுக்களைத் தொடங்குவது குறித்து முடிவு செய்யலாம்என்று நான் திரு பண்டாரிக்குச் சொன்னேன்.

இப்படி திரு உமா மகேஸ்வரன் சொன்னதாக 'இந்து'வில் செய்தி வெளியாகி உள்ளது.

## யாழ்--முத்தையன்கட்டு பஸ் பாதை மாற்றம்

யாழ்ப்பாணம், ஏப் 17

இன்றுமுதல் யாழ்ப்பாணம் முத்தையன்கட்டு பஸ் சேவை பாதை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 6-30 மணிக்குப் புறப்படும் பஸ், பரந்தன் சந்தி, புதுக்குடியிருப்புச் சந்தி, கற்சிலைமடு ஊடாக முத்தையன் கட்டை அடையும்.

நண்பகல் 12-30 மணிக்கு முத்தையன்கட்டில் இருந்து புறப்படும் பஸ் இதே பாதை வழியாக யாழ் வந்து சேரும்.

பழைய கட்டணமே இச்சேவைக்கு அறவிடப்படும் என போக்குவரத்துச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை காலமும் மாங்குளம், கொக்காவில், ஒட்டிசுட்டான் ஊடாகவே முத்தையன் கட்டுக்கு பஸ்சேவை நடந்து வந்தது.

பயணிகளின் வேண்டுகோளுக்கு இணங்கவே, இப்பாதை மாற்றம் செய்யப்பட்டுள்ளது

### காணவில்லை

இராஜசுந்தரம் விஜயரட்ணம் என்பவருடைய (Official Identity Card) தேசிய அடையாள அட்டையும் (இல. 60228 1969 X, 107|6. பண்டாரநாயக்க மாவத்தை. கொழும்பு-12 என விலாசமிடப்பட்டது) காணாமல் போய்விட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 13, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு ஒப்படைக்கவும்.

## மகுடி . . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப் பிரசுரம் ஒன்றை சிப்பாய்கள் கைப்பற்றினர்.

செய்திப்பத்திரிகை என்று எண்ணி இதனை வாங்கியதாக வயோதிபர் சொன்னார்.

இதன் பின்னர் படகில் இருந்து ஆளை வரும் இறக்கப்பட்டு முழங்காலில் நிற்க வைக்கப்பட்டனர்.

இவர்களைப் பார்வையிட உயர் அதிகாரி ஒருவர் வந்தார். எங்கே போகிறீர்கள் என்று நாதஸ்வர குழுவினரைக் கேட்டார்.

பின்னர் அந்த இடத்திலேயே நாதஸ்வரக் கச்சேரி நிகழ்த்தும்படி கேட்டுக்கொண்டார்.

அதன்படி நாதஸ்வரக் கோஷ்டி மகுடி ராகத்தை வாசித்தது.

அரை மணித்தியாலம் வரை ஆறுதலாக நாதஸ்வர இசையைக் கேட்டார் உயர் அதிகாரி.

அதன் பின்னர் வயோதிபரிடம் இருந்த துண்டுப் பிரசுரத்தைக் கைப்பற்றிக்கொண்டு பயணிகள் படகில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

## ஜெயவர் . . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மும் நேரமும் வீணானது தான் மிச்சம் உருப்படியாக இடம்பெற்றது ஒன்றுமே இல்லை.

இந்தியாவில் புகலிடம் பெற்றுள்ள தீவிரவாதிகள் இலங்கைக்குள் வந்து இராணுவத்தைக் கொன்றுவிட்டு மீண்டும் இந்தியா சென்று விடுகின்றனர் இவர்கள் ஆத்திரமூட்டப் பயன்படுத்தப்படுகிறார்கள்.

இவர்கள் 5 பேரைக் கொன்றால் அரசபடையினர் 50 அப்பாவிகளைக் கொன்று விடுகிறார்கள்.

இலங்கையில் தமிழர் படுகொலை பற்றி பிரதமர் ராஜீவ் காந்தி கவலை தெரிவிக்கிறார். அவர் கவலை தெரிவித்த மறுகணம் படுகொலை அதிகரிக்கிறது.

திரு. ஜெயவர்த்தனா ஆட்சியில் இருக்கையில் அரசியல் தீர்வு காணப்படவேண்டும். இல்லை என்றால் எப்போதுமே தீர்வு காணப்படமாட்டாது.

இப்படி திரு தொண்டமான் சொன்னார்.

இலங்கைக்குச் சில நாடுகள் ஆயுதங்கள் வழங்குகின்றன; பயிற்சி கொடுக்கின்றன— என்று செய்தியாளர் கேட்டதற்கு அமைச்சர் தொண்டமான் பதில் அளிக்கையில் சொன்னதாவது:

இந்தியாவில் தமிழ் இளைஞர், தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிக்கப்பட்டு உள்ளது.

அதை எதிர்க்கும் ஓர் அடையாள நடவடிக்கையாகவே இலங்கைக்கு ஏனைய நாடுகள் உதவுகின்றன.

இப்படிச் சொன்னார் அமைச்சர் தொண்டமான்,

**Euro Lanka Travels Ltd.**

ஜேர்மனி செல்ல விரும்புவோர் பிரதானமாக ஜேர்மனியில் தொடர்பு உள்ளவர்களுக்கான நேரடிப் பிரயாண வசதிகள் உடனடியாகச் செய்து தரப்படும்.

மற்றும் எந்தவொரு நாட்டுக்கும் விமானப் பயணச் சீட்டுகள்.

இந்தியா செல்வதற்கான விசா, பயணச் சீட்டுக்கள் என்பன குறைந்த விலையில் பெற்றுத் தரவும், பாஸ்போர்ட், Bonding முதலிய ஒழுங்குகளும் செய்து தரப்படும் நாடுங்கள்,

திரு. P. சர்வேஸ்வரன்
யூரோ லங்கா ரவல்ஸ் லிமிட்டெட்,
185|1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
வின்சர் படமாளிகை முன்பாக 1 ஆம் மாடி.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட், 207, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் வெளியீட்டு திகதி 17-04-1986

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number QJ/28 N 86

## லிபியா மீதான தாக்குதல் குறித்து

### ஈ. பி. ஆர். எல். எப். கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 17

லிபியா மீதான அமெரிக்கத் தாக்குதலைக் கண்டித்து ஈ.பி.ஆர்.எல்.எப். நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது

அந்த அறிக்கை வருமாறு:-

14-04 1986 திங்களன்று லிபியக் குடியரசின் மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் திட்டமிட்டு நடத்திய விமானத் தாக்குதல் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக் கொள்கையின் ஓர் அங்கமேயாகும்.

கிரெனடா மீது தனது ஆக்கிரமிப்புக் கரங்களை நீட்டிய அமெரிக்க ஏகாதிபத்தியம் எந்த நேரமும் நிக்கரகுவா மீதும் தனது ஆக்கிரமிப்புக் கரங்களை நீட்டுவதற்கு ஆயத்தமாகவே உள்ளது.

லிபியக் குடியரசுமீதான அமெரிக்காவினது தாக்குதலானது மத்திய கிழக்கு நாடுகளுக்கு மாத்திரமன்றி அகிலஉலகிற்குமே ஓர் அச்சுறுத்தலாகும்.

உலகம் முழுவதும் நிறம் அரசபயங்கரவாதங்களுக்கு உறுதுணையாக இருந்து வரும் அமெரிக்க ஏகாதிபத்தியமானது, விடுதலை இயக்கங்களுக்கும் முற்போக்கு நாடுகளுக்கும் ஆதரவாக இருந்து வரும் லிபியக் குடியரசை பயங்கரவாதிகளின் கோட்டை என்று வர்ணிப்பது வேடிக்கைக்குரியது

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இந்த ஆக்கிரமிப்புக் கொள்கையை, நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறது.

அதே சமயம் அணிசேரா நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள இந்தியாவும், அதன் கூட்டிலுள்ள ஏனைய நாடுகளும் அமெரிக்காவின் இக் காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டித்ததை நாம் வரவேற்கின்றோம்.

அதேவேளை சில காலங்களுக்கு முன் அணிசேரா அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த சிறிலங்காவானது அமெரிக்கா, இஸ்ரவேல் போன்றவற்றுடன் கூட்டுச் சேர்ந்து செயல்படுவதன் மூலம் அரபு நாடுகளுக்கு எதிரான போக்கையே கொண்டுள்ளது.

இவ்வகையில் சிறிலங்கா அரசுக்கெதிராக சகல முற்போக்கு சக்திகளும் இணைந்து செயற்பட வேண்டும்.

ஈழவிடுதலைப் போராட்டமானது வெறும் தேசிய விடுதலைப் போராட்டம் அல்ல ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான போராட்டமாகும்.

ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தை அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகளுடனும், முற்போக்குச் சக்திகளுடனும் இணைந்து முன்னெடுப்போம்.

## ரெலோ அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 17

லிபியா மீதான அமெரிக்க தாக்குதல் குறித்து தமிழ் ஈழ விடுதலை இயக்கம் விடுத்த அறிக்கை வருமாறு:-

அபிவிருத்தியடைந்து வரும் நாடான லிபியாவின் மீது வெறி பிடித்த அமெரிக்க நிர்வாகம் பாய்ந்துள்ளது.

உலக சமாதானத்திற்கு எதிராக அணு ஆயுத உற்பத்திகளிலும் நட்சத்திரப் போர்களிலும் ஈடுபட்டுவரும் சீழ்பிடித்த அமெரிக்க நிர்வாகமானது தனது கறைபடிந்த பற்களை மீண்டும் ஒரு முறை லிபியாவின் மீது தீட்டிப்பார்த்துள்ளது.

ஏகாதிபத்தியமானது தனது பொருளாதார நெருக்கடிகளை திசை மாற்றும் பொருட்டு போர்களை வருந்தியழைப்பது ஒன்றும் புதுமையானதல்ல

ஆனாலும் இவ்வாறு கீழ்த்தரமான முறையில் செயற்படுவதன் மூலம் தனது ஏகாதிபத்திய வெறியை அப்பட்டமாக வெளிக்கொணர்கிறது அமெரிக்க நிர்வாகம்,

மூன்றாம் உலக நாடுகளைத் தனது ஆளுமைக்கு உட்படுத்துவதன் மூலம் சந்தைகளைத் தேட முற்படும் அமெரிக்க—பிரித்தானிய ஏகாதிபத்தியங்களின் இவ்வாறான சமாதானத்துக்கு எதிரான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்

வெறிபிடித்த ஏகாதிபத்தியங்களை உடைத்தெறிய ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற உணர்வின் அடிப்படையில் லிபிய மக்களுடன் எமது கரங்களை பிணைத்துக் கொள்ளவே விரும்புகின்றோம்

## தஹநாயக்கா . . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு ஐ. தே. க பிரசாரக் கூட்டத்திலும் டாக்டர் தஹநாயக்கா கலந்து கொள்ளவில்லை. அதற்காகவே அவர் மீது கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்மீமன தொகுதியில் ஐ. தே. க வேட்பாளராகப் போட்டியிடுபவர் திரு அல்பர்ட் சில்வா

இவர் 1977 தேர்தலில் காலித் தொகுதியில் ஐ. தே. க வேட்பாளராகப் போட்டி இட்டு சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்ட டாக்டர் தஹநாயக்காவைத் தோற்கடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது

அக்மீமன இடைத்தேர்தலில் டாக்டர் தஹநாயக்காவைத் தீவிரமாகப் பங்குபற்ற வைப்பதற்காகவே அவருக்கு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

## 6 மீனவர் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளனர் என தெரிவிக்கப்பட்டது.

தாளையடியைச் சேர்ந்த பேதுருப்பிள்ளை பென்ஞமின் (வயது 55) செல்வராசா திருச்செல்வம் (வயது 20)

நாகர்கோயிலடியைச் சேர்ந்த இராமநாதன் பத்மநாதன் (வயது 30)

பருத்தித்துறையைச் சேர்ந்த தெய்வநாயகம் சோமநாதன் (52 வயது) சோமநாதன் யோசப் ஜெயராசா (12 வயது) த. உதயராசா (26வயது) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

சிலரது படகுகளும் கடற்படையினரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஹெலிக்கொப்டர் வீசிய பிரசுரங்கள்

பலாலி, ஏப்ரல் 17

நேற்று முன்தினம் தொண்டமானாறு இராணுவ முகாமை அண்டிய பகுதிகளில் உள்ள கிராமங்களில் ஹெலிக்கொப்டர் மூலம் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.

"சமாதானத்தை விரும்பும் தொண்டமானாறு பிரசைகளுக்கு" என்ற தலைப்பில் யாழ் பாதுகாப்புப் படைத் தளபதியினால் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டிருந்தது.

இதற்கிடையில் நேற்றும் நேற்று முன்தினமும் தெல்லிப்பளைப் பகுதியிலும் ஹெலிக்கொப்டரில் இருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.

## ரூபவா . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கு முறையிடப்பட்டது

இதைத் தொடர்ந்தே தமிழ், சிங்களத் திரைப் படங்களை ரூபவாஹினியில் காண்பிப்பது இல்லை என்று முடிவு செய்யப்பட்டது.

இப்படி அமைச்சர் அல்விஸ் சொன்னார்.

## விளையாட்டரங்கு

## சென்ரலைற்ஸ் வெற்றி

### 113 ஓட்டங்களுடன் சரிந்த மல்லாகம் அணி

— விளையாட்டுச் செய்தியாளர் சண். ஜோண்சன்

யாழ்ப்பாணம், ஏப்ரல்17

நேற்று முன்தினம் நடைபெற்றமட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் சென்ரலைற்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றியீட்டியது

மல்லாகம் விளையாட்டுக் கழக அணியை இந்த அணி 93 ஓட்டங்களால் தோற்கடித்தது

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரலைற்ஸ் அணி 37ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது

எம் மதிவதனன், எஸ் நிர்மலன், கே. மனோஜ் குமார், எல். அன்ரூ கிறேசியன் ஆகியோர் முறையே 21, 40, 41, 37 ஓட்டங்களையும் கே சண்முகலிங்கம் ஆட்டம்இழக்காமல் 22 ஓட்டங்களையும் பெற்றனர்

வி செல்வேஸ்வரன் 2 விக்கெட்டுக்களையும், எஸ் செல்வகுமார், எஸ் சிறிதரன்ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலளித்து ஆடிய மல்லாகம் விளையாட்டுக்கழக அணி 39ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 113ஓட்டங்களைப் பெற்றது.

எஸ் நவகுமார், எஸ். விக்கி, வி. செல்வேஸ்வரன் ஆகியோர்முறையே 20, 21, 29 ஓட்டங்களைப் பெற்றனர்

எஸ். நிர்மலன் 5 விக்கெட்டுக்களையும் கே தோமஸ் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

## அரியாலை ஐக்கிய அணி சாம்பியன்

### கரபந்தாட்ட சுற்றுப் போட்டியில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகம் நடத்திய கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி சாம்பியனானது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தச் சுற்றுப் போட்டியில் இறுதிச் சுற்று ஆட்டத்தில் வெற்றி பெற்ற அரியாலை ஐக்கிய அணி 23 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றது.

15 புள்ளிகளைப் பெற்ற திருநெல்வேலி சிவன் விளையாட்டுக் கழக அணி இரண்டாம் இடத்தையும் பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்று வந்த இந்தப் போட்டியில் 36 விளையாட்டுக் கழக அணிகள் பங்கு பற்றின.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிக்கு கப்டன் டி ஏ. எம் குணசிங்கம் நடுவராகக் கடமையாற்றினார்.

ஈச்சமோட்டை விளையாட்டுக்கழக மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெற்றன.

## பாகிஸ்தான் வெற்றி

ஷார்ஜா, ஏப்ரல் 17

நியூஸிலாந்து அணிக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி இலகுவாக வெற்றி பெற்றது.

ஷார்ஜாவில் நடைபெறும் ஒஸ்ட்ரோ-ஏசியா கிரிக்கெட் போட்டியின் அரை இறுதி ஆட்டத்திலே பாகிஸ்தான் அணி வென்றது.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது

இந்த அணி 31 5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 94 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

சுருள் பந்து வீச்சாளர் அப்துல் காதர் 9 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், வசிம் அக்ரம் 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

நியூஸிலாந்து அணியின் 64 ஓட்டங்களுக்கு பதிலளித்து ஆடிய பாகிஸ்தான் அணி 22 4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 65 ஓட்டங்களைப் பெற்று 10 விக்கெட்டுக்களால் ஆட்டத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் இறுதி ஆட்டத்தில் இந்திய அணியுடன் மோத பாகிஸ்தான் அணி தகுதி பெற்றுள்ளது

## நீர்கொழும்பில் மலையக தொழிலாளர் வாழும் பகுதியில் பதற்றம்

### கப்பம் கேட்டவர் கொலை

கொழும்பு, ஏப்ரல் 17

நீர்கொழும்புப் பகுதியில் கணேதும என்ற இடத்தில் மலையகத் தமிழ் நகர சுத்திகரிப்புத் தொழிலாளருக்கும்வேறு சிலருக்கும் இடையில் நடைபெற்றதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்றில் ஒருவர் கொல்லப்பட்டார். இன்னொருவர் படுகாயமடைந்தார்.

இது பற்றிக் கூறப்படுவதாவது;

மலையகத் தமிழ் நகர சுத்தித் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிக்குச் சென்ற சிலர் கப்பம் கேட்டுக் குழப்பம் விளைவித்தனராம்.

பின்னர் நகர சுத்தித் தொழிலாளர் குடும்பம் ஒன்றைச் சேர்ந்த இளம் பெண் ஒருத்தியை கப்பம் கேட்ட ஒருவர் பிடித்து இழுத்தாராம்.

இதைத் தொடர்ந்து இரண்டு தரப்பாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில், கப்பம் கேட்டு சென்றவர்களில் இரண்டு பேர் படுகாயம் அடைந்தனர்.

அவர்களில் ஒருவர் பின்னர் மரணமானார்.

இதனைத் தொடர்ந்து சில மணித்தியாலங்களுக்குப் பின்னர் நகரசுத்தித் தொழிலாளர் வசிக்கும் விடுதிகள் சேதமாக்கப்பட்டன.

இச்சம்பவத்தின் பின்னர் நகர சுத்தித் தொழிலாளர்கள் வேறு இடத்துக்குப் புறப்பட்டுச் சென்று விட்டனர்.

## அமெரிக்க....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்க தாக்குதல் அடுத்து உலகெங்கும் உள்ள அமெரிக்க தூதரகங்களுக்கு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க குண்டு வீச்சில் இப்போது 13 பேர் மரணம் அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது

அமெரிக்க தாக்குதலுக்கு பிரிட்டன் முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

## தெல்லிப்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள மாடிக்கட்டடப் பகுதியாகிய யூனியன் கல்லூரிக்குள் நுழைந்து கொண்டனர்.

இதனால் ஹெலிக்கொப்டர் யூனியன் கல்லூரி வளவிற்குள்ளும் துப்பாக்கித் தாக்குதலை மேற்கொண்டது.

சுமார் அரைமணி நேரமாகத் தெல்லிப்பளைச் சந்தி, யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை - வயாவிளான் வீதிகளில் தனது தாக்குதல்களை ஹெலிக்கொப்டர் தொடர்ந்தது.

இடைக்கிடை 'ஷெல்' தாக்குதலும் ஹெலிக்கொப்டரால் மேற்கொள்ளப்பட்டது.

யூனியன் கல்லூரி உட்பட பல வீடுகள் பாதிப்படைந்தன. மாரியம்மன் கோயில், வைரவர் கோயில் கூரைகள் சேதம் அடைந்தன.

ஏழு பேருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவர்கள் அரசாங்க தனியார் வைத்தியசாலைகளுக்கு அவசரஅவசரமாக எடுத்துச் செல்லப்பட்டனர்.

தெல்லிப்பளைப் பகுதியைத் தாக்கிய ஹெலிக்கொப்டர் கட்டுவன் பக்கம் சென்றபோது போராளிகளால் எதிர்த் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கட்டுவனில் இடம் பெற்ற தாக்குதலில் காயமடைந்த வயோதிப மாது ஒருவர் தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு பின் யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

வீதிகளில் குண்டுபட்ட குழிகள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org